# வினைவயிற்பிரியுமுன் : தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்



ச.பார்வதி
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி – 24.

கற்புவாழ்க்கையில் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் பிரியக்கூடிய சூழல்கள் நேரிடும். அப்படி தலைவன் தலைவியைவிட்டு பிரியக்கூடிய பிரிவுகள் வேந்தன் பொருட்டுப் பிரிவு, பொருள்வயிற்பிரிவு என இருவகைப்படும். 'வினையே ஆடவற்கு உயிரே' என்பதால் வினையின் அவசியத்தைத் தமிழர் உணர்ந்திருந்தமையைக் கற்பு வாழ்க்கை குறித்த சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. இவ்வகையில் சங்க அகஇலக்கியப் பாடல்களுள் அடங்கும் கற்பு பற்றிய பாடல்களுள் 'வினைவயிற்பிரியுமுன்' கூற்று நிகழும் பாடல்களைத் தொல்காப்பியச் செய்திகளுடன் ஒப்பிட்டு இவ்வியல் ஆராய்கிறது.

## வினைவயிற்பிரியுமுன்

வினை மேற்கொள்வதற்குமுன் பிரிந்தால் ஏற்படும் துன்பம் கண்டு கலங்கி தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரும் பேசுவர். வினைவயிற்பிரியுமுன் தான் மேற்கொள்ள இருந்த வினையைத் தவிர்தல் வேந்தற்குற்றுழி பிரிவில் நிகழாது. பொருள்வயிற்பிரிவிலேயே தவிர்தல் நிகழும். எனவேதான் சங்கப் புலவர்கள் செலவழுங்குதலைப் பொருள்வயிற்பிரிவிலேயே பாடினர்.

பொருள் தேடுவதன் காரணமாகப் பிரியும் பிரிவு பொருள்வயிற்பிரிவாகும். இது பொருட்பிணிப்பிரிவு என்றும் வழங்கப்பெறும். தன்னிடம் எவ்வளவு பொருளிருந்தும் தனது முன்னோர்கள் சேர்த்துவைத்த பொருளைக் கொண்டு நாம் வாழ்தல் சிறப்பன்று என்றெண்ணும் இளைஞர்கள் பொருள் தேடுதற்பொருட்டு வெளிநாட்டிற்குச் செல்வதைக் காணலாம்.

பொருளின் தன்மையைத் திருவள்ளுவர்,

**"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்**
**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள்.247)**

என்ற குறளில் உயிர்கள்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பமில்லை. பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயினாற்போல என்கிறார்.

"பொருளில்லாக் குறையால், பொருள்திரட்ட வேண்டுமென்ற நோக்கத்தால், தலைவன் பிரிகின்றான் என்று கருதவேண்டியதில்லை. தன் பெற்றோர் ஈட்டிய பொருளும்

குடி வழியாகப் பெற்ற செல்வமும் ஏராளமாக அவனிடம் இருந்தாலும், அவற்றைத் துய்ப்பது ஆண்டன்மைக்கு இழுக்காகும் என்று கருதியும் தனது முயற்சியால் ஈட்டிய பொருளைக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும் என்று எண்ணியும் பிரிவான். அன்றியும், தம் முன்னோர் சேமித்த தாயப் பொருளைக் கொண்டு தேவர் காரியமும் பிதிரர்க் காரியமும் செய்வித்தால் தேவர்களும் பிதிரர்களும் இன்புறார் என்பது அக்காலத்தினர் கொள்கை. தானே தன் முயற்சியால் பொருள் ஈட்டி, அதனைக்கொண்டு இச்செயல்களை ஆற்றுவித்தால் தனக்குப் பெருமை ஏற்படுவதுடன் தேவர்கட்கும் பிரதிர்கட்கும் இன்பம் உண்டாகும் என்ற கருத்தால் பொருளீட்டப் பிரிவான்"[1] என்று ந.சுப்புரெட்டியார் கூறுகின்றார். (ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.190)

இதற்கு இலக்கணம் கூறப்புகுந்த இறையனார் களவியனார், "பொருளில்லாத காரணத்தால் பொருள் தேடச் செல்வானல்லன் தலைவன். முன்னோர்களால் தேடி வைக்கப்பட்ட பெருஞ்செல்வம் இருந்தாலும் அதைக்கொண்டு வாழ்க்கை நடத்த விரும்பமாட்டான் அக்கால உயர்தலைமகன். அதனை அவமானமாகவே கருதுவான். ஆதலின் பொருள்தேடப் பிரிவான். தெய்வங்களும் முன்னோர்களும் இன்புறமாட்டார்கள் என்பது அவ்வுயர் தலைமகன் எண்ணம். ஆதலால் அவர்களை இன்புறுத்துவதற்கும் அவன் பிரிவான்"[2] என்று கூறுவர். (துரை. இராசாராம், இறையனாரகப்பொருள், ப.149)

லேனா தமிழ்வாணன், "பொருள் அறத்திற்கு மட்டும் தேவையானதல்ல; மறத்திற்கும் அஃது வேண்டுவதாகும். செறுநர் செறுக்கறுக்கும் கூரியவாள் செல்வமன்றி வேறொன்றில்லை. பொருள் மிக்கவரிடமே படையும் மேலோங்கி நிற்கும். அழைப்பின்றிப் பலரும் நாடிவருவர். பகைவரும் அஞ்சிப் பின்தங்கி நிற்பர்"[3] என்பார். (லேனா தமிழ்வாணன், சங்க இலக்கியத்தில் அகக்காட்சிகள், ப.55)

கற்றறிந்தார் ஏத்தும்கலியின் பாலைக்கலி பொருள்வயிற்பிரிதலைப் பாங்குறச் சுட்டுகிறது. "தலைமகன் பொருள்வயிற் பிரியக் கருதுவது அறத்தாற் பொருளீட்டி அருளாளர்க்கு அளிக்கவும், பகைவென்று மேம்படவும், காதலின்பம் துய்க்கவும் ஆய காரணங்களின் பொருட்டேயென்று தலைவி தோழிக்கு மொழிவாள்."[4] (நச்சினார்க்கினியர் (உ.ஆ.), கலித்தொகை, பா.11)

மேலும், "தொலைவாகி இரந்தோர்க்கொன்றீயாமை இளிவெனக் கருதியும், இல்லென இரந்தோர்க்கொன்றீயாமை இளிவெனக் கருதியும், இடனின்றி இரந்தோர்க்கொன்றீயாமை இளிவெனக் கருதியும் தலைவன் பொருள்வயிற் பிரிந்தான்."[5] என்று தோழி தலைவிக்குக் கூறுவாள். (நச்சினார்க்கினியர் (உ.ஆ.), கலித்தொகை, பா.1)

**தலைவி கூற்று: (12)** நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய மூன்று நூல்களுள் வினைவயிற்பிரியுமுன் என்ற சூழலில் தலைவி கூற்று நிகழ்த்தும் 12 பாடல்களைப் பின்வருமாறு பகுக்கலாம்.

**தலைவி கூற்று (12)**

**தலைவி தலைவன் இன்றித் தான் தனித்திருக்க வேண்டிய தன்எதிர்கால நிலையைச் சொல்லியது (7)**

1.தலைவனைத் தழுவிக் கிடக்கும் நிலையிலும் மாலைப்பொழுதில் அவனைப் பிரிந்து தனிமையில் வாடும் யான் எவ்வாறு அவன் பிரிந்து சென்றால் ஆற்றியிருப்பேன்?
(நற்.73)

2.தலைவன் பிரிந்தால் உயிர்வாழமாட்டோன் என்பது உறுதி. ஆதலால் நம் காதலலைக் கூறி செல்லாமல் தடுப்பதே தக்கது.
(நற்.79)

3.தலைவன் பாலை வழியில் செல்லத் துணிந்தனர் என்பது உறுதி. ஆகையால் யான் துன்ப வெள்ளத்தில் நீந்தி உழல்கின்ற நாள் வந்தெய்தியது போலும்.
(நற்.17)

4.தலைவனின்றி மனையின்கண் நாம் இருப்பது கொடுமையாம். இதனால் நம் நிலை என்னாகுமோ?
(நற்.296)

5.முன்பனிக்காலத்தில் வருத்தத்தை யான் எய்தும்படி தலைவன் என்னைப் பிரிந்துச் செல்லப் போகின்றான் என்று ஊரார் கூறுகின்றனரோ?
(குறுந்.76)

6.தலைவரைப் பிரிந்து தனித்து உயிருடன் இருக்க வல்லாரிடத்து அவர் உள்ளம் விரும்பி ஏற்றுக்கொள்ளுமாறு சொல்லுவாராக! அவ்வாறு தனித்திருக்கும் ஆற்றலைப் பெற்றேன் அல்லேன்!
(அகம்.157)

7.தலைவன் அருள் இல்லாது நம்மை பிரிந்து செல்வாரானால், அவர் புணர்தலை விரும்பி கடும்பனியால் பற்களை நறநறவென்று கடித்து நடுக்கம் கொள்வோம்; அதுவன்றி எம்மால் யாது செய்ய இயலும்?
(அகம்.217)

**தலைவனது பொருளை மதிக்கும் பண்பை விமர்சித்துப் பேசி உடம்பட்டது போல எள்ளுதல் (3)**

1.அருளும் அன்புமின்றி பொருள் கருதி நம்மைப் பிரிபவர் அறிவுடையவர் ஆயின் ஆகுக. பிரிவை ஆற்றாது வருந்தும் யாம் பேதையம் ஆவேம்.
(குறுந்.20)

2.பொருளே பொருளாக மதிப்பவரல்லால் அருளைப் பொருளாக மதிப்பார் யாரும் இலர் போலும்.
(குறுந்.174)

3.தலைவன் தன்னந் தனியராய்ப் பாலைவழியில் செல்லுகின்றார் என்று ஊர் மக்கள் கூறுகின்றனர். மேலும் அவர்கள் யாமே உள்ளம் நொந்து இன்னாதனவற்றையே சொல்லுகின்றோம் என்றும் பழி கூறவும் செய்கின்றனர். அதற்குக் காரணம் தான் யாதோ?
(அகம்.293)

**தலைவனின் அன்பைப் புகழ்தல் (1)**

தலைவன் யான் வருந்தும்படி பிரிகின்ற குணக்குறைபாடு இல்லாதவர்.
(நற்.1)

**தோழி தலைவனது பொருள்வயிற்பிரிவுக்கு உடன்பட்டமையை நன்று எனல் (1)**

பாலை வழியில் நாம் செல்கிறோம் என்று தலைவர் கூறினார். அது நல்ல செயல் என நீ விருப்பத்துடன் கூறினாய். நீ நன்றே செய்தாய்.
(நற்.24)

## தலைவி தலைவனின்றித் தான் தனித்திருக்க வேண்டிய இயலாத தன் எதிர்கால நிலையைச் சொல்லியது: (7)

வினைவயிற்பிரியுமுன் என்ற சூழலில் தலைவி தலைவனின்றித் தனித்திருக்க இயலாத தன் நிலையைக் கூறும் வகையில் 7 பாடல்கள் அமைகின்றன.

தலைவனின்றித் தனித்திருக்க இயலாத நிலைக்கான காரணங்களாகத் தலைவி சுட்டுவன அச்சம், பசலையுறுதல், ஊராரின் பழிச்சொல், தன்னுயிருக்குக் கேடு நேர்தல் முதலியன ஆகும்.

தலைவர் பிரிந்து செல்வாராயின் என்னால் மாலைக்காலத்து உயிருடன் இருத்தல் இயலாது என்று தலைவி கூற்று நிகழ்த்துவதை மூலங்கீரனாரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

**வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன**
**மாணா விரல வல்வாய்ப் பேஎய்**
**மல்லன் மூதூர் மலர்ப்பலி உணீஇய**
**மன்றம் போழும் புன்கண் மாலைத்**
**தம்மொடும் அஞ்சும் நம்மிவண் ஒழியச்**
**செல்ப என்ப தாமே செவ்வரி**
**மயிர்நிரைத் தன்ன வார்கோல் வாங்குகதிர்ச்**
**செந்நெலஞ் செறுவின் அன்னந் துஞ்சும்**
**பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டு அன்னஎன்**
**நுதல்கவின் அழிக்கும் பசலையும்**
**அயலோர் தூற்றும் அம்பலும் அளித்தே (நற்.73)**

துன்புறத்தக்க மாலைப்பொழுதில் தலைவரோடு இருப்பினும் நாம் அஞ்சுவோம். இந்நிலையில் நாம் இங்குத் தனியே தங்குமாறு நம்மைக் கைவிட்டு திருச்சாய்க்கானகத்தைப் போன்ற என் நெற்றியின் அழகை அழிக்கும் பசலையையும் அதனைக் கண்டு அயலவர் தூற்றும் பழிச்சொல்லையும் எனக்கு அளித்து அவர் செல்லுகிறார் என்று பக்கத்திருப்போர் கூறுவர். இதனை எவ்வாறு ஆற்றியிருப்பேன்? என வருந்தியுரைக்கிறாள்.

இதே அமைப்பில் பின்வரும் பாடல்கள் அமைகின்றன.

பிரியின் என்னுயிர்க்குக் கேடு நேரும். ஆகவே நாம் நேரில் கூறி நிறுத்துவதன்றிச் செலவினை வேறு எவ்வாறு தவிர்க்க இயலும் (கண்ணாகனார், நற்.79).

கண்ணீர் வெள்ளத்தில் விழுந்து நீந்தும் நாளும் இப்போதே வந்து முடிந்தது போலும். நான் எவ்வாறு ஆற்றுவேன் (……….., நற்.177).

பொருளை நினைத்த உள்ளமுடையவராய் விரைந்து செல்வர் தலைவர். நாம் துன்பத்தில் மிகவும் உழன்று இங்கேயே இருக்க வேண்டியவர்களாய் ஆயினோம் (குதிரைத் தறியனார், நற்.296).

முன்பனிக்காலத்தில் வருத்தத்தை யான் எய்தும்படி தலைவர் என்னைப் பிரிந்து போவார் என்று கூறுகின்றனரோ? (கிள்ளிமங்கலங்கிழார், குறுந்.76).

நான் தனித்திருக்கும் ஆற்றலைப் பெற்றேன் அல்லேன்! (வேம்பற்றூர்க் குமரனார், அகம்.157).

தலைவன் அருளின்றி பிரிந்து செல்வாரானால் பனியால்மிக வருந்திப் பற்களை நறநறவென்று கடித்துக் கொள்வோம். அதுவன்றி யாது செய்ய இயலும்? (கழார்க்கிரன் எயிற்றியனார், அகம்.217).

**தலைவனது பொருளை மதிக்கும் பண்பை விமர்சித்துப் பேசி உடம்பட்டது போல எள்ளுதல்: (3)**

தலைவனது பொருளை மதிக்கும் பண்பை விமர்சித்துப் பேசி உடம்பட்டது போல எள்ளும் வகையில் 3 பாடல்கள் அமைந்துள்ளன.

பிரிவை ஆற்றாது வருந்தும் யான் பேதைமையுடையவள் எனத் தலைவி தன்னைத் தானே கூறிக்கொள்ளுவதைக் கோப்பெருஞ்சோழனின் பின்வரும் பாடல் சுட்டுகிறது.

**அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து**
**பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்**
**உரவோர் உரவோர் ஆக**
**மடவம் ஆக மடந்தை நாமே (குறுந்.20)**

தோழி! அருளையும் அன்பையும் தம் உள்ளத்தினின்றும் அகற்றி எனக்குத் துணையாந் தன்மையையும் அகற்றி நிலையில்லாத பொருளைக் கருதி பிரியக் கருதுவோர் அறிவுடையோர் ஆகுக. அவர் பிரிவிற்கு ஆற்றாது வருந்தும் யாம் அறிவிலேம் ஆயின் ஆகுவம் என்கிறாள்.

இதே அமைப்பில் பின்வரும் பாடல்கள் அமைகின்றன.

பொருளே பொருளாக மதிப்பவரல்லால் இவ்வுலகில் அருளைப் பொருளாக மதிப்பார் இலர் போலும் (வெண்பூதியார், குறுந்.174).

ஊர்மக்கள் தலைவர் பாலைவழியில் தன்னந் தனியாகச் செல்லுகிறார் என்று கூறுகின்றனார். அவர்களே என்னை பழிகூறவும் செய்கின்றனர் (காவன் முல்லைப் பூதனார், அகம்.293).

**தலைவனின் அன்பைப் புகழ்தல்: (1)**

தலைவி தலைவனின் அன்பினைப் புகழ்ந்து கூறும் வகையில் 1 பாடல் அமைகிறது.

தலைவி தலைவன் என்னை வருந்தும்படி விட்டுப்பிரிகின்ற குணக்குறைபாடு இல்லாதவன் எனப் புகழ்வதைக் கபிலரின் பின்வரும் பாடல் சுட்டுகிறது.

**நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்**
**என்றும் என்றோள் பிரிபறி யலரே**
**தாமரைத் தண்டா தூதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீரின் றமையா வுலகம் போலத்**
**தம்மின் றமையா நந்நயந் தருளி**
**நறுநுதல் பசத்த லஞ்சிச்**
**சிறுமை உறுபவோ செம்பறி யலரே (நற்.1)**

தோழி! நம் காதலர் தவறாத வாய்மையுடையவர், இனிமையுடையவர். எப்பொழுதும் என் தோள்களைப் பிரிதல் என்பதே அறியாதவர். அத்தகைய சிறந்தவருடைய நட்பு, தேனி தாமரையின் குளிர்ந்த மகரந்தங்களை ஊதி உயர்ந்து நிற்கும் சந்தனமரத்தின் உச்சியில்

கொண்டு சென்று வைத்த தேனைப்போல உறுதியாக உயர்ந்தது. தண்ணீர் இல்லாமல் இவ்வுலகம் அமையாது; அதுபோல அவர் இல்லாமல் நாம் இல்லை. அவர் பிரிந்தால் நம் நெற்றியில் பசலை படரும். அதைக் கண்டு தடுமாற்றம் அடைவாரோ? அங்ஙனம் செய்யார் காண் எனத் தலைவி கூறுகின்றாள்.

**தோழி தலைவனது பொருள்வயிற்பிரிவுக்கு உடன்பட்டமையை நன்று எனல்: (1)**

தலைவனது பிரிவுக்கு உடம்பட்ட தோழியை தலைவி மகிழ்ந்து பாராட்டிக் கூறும் வகையில் 1 பாடல் அமைகிறது.

ஆடவர் பொருளின் பொருட்டு நீங்குதல் பண்புதான். ஆதலால் தோழி அதனை நன்றென ஏற்றமை குறித்து மகிழ்ந்தமையைக் கணக்காயனாரின் பின்வரும் பாடல் புலப்படுத்துகிறது.

**பார்பக வீழ்ந்த வேருடை விழுக்கோட்**
**டுடும்படைந் தன்ன நெடும்பொரி விளவின்**
**ஆட்டொழி பந்திற் கோட்டுமூக் கிறுபு**
**கம்பலத் தன்ன பைம்பயிர்த் தாஅம்**
**வெள்ளில் வல்சி வேற்றுநாட் டாரிடைச்**
**சேறும் நாமெனச் சொல்லச் சேயிழை**
**நன்றெனப் புரிந்தோய் நன்றுசெய் தனையே**
**செயல்படு மனத்தார் செய்பொருட்**
**ககல்வ ராடவ ரதுவதன் பண்பே (நற்.24)**

சேயிழாய்! நெடிய விளாமரத்தின் பழங்கள் கம்பளத்தை விரித்தாலொத்த பசிய பயிரின்கண்ணே பந்து கிடப்பதுபோலக் கிடக்கும். அப்படிப்பட்ட பாலைநில வழியில் யாம் செல்கிறோம் என்று தலைவன் கூற, அது நல்ல செயல் என்று நீ விருப்பத்துடன் கூறினாய். பொருளுக்காக அகலுதல் இயற்கையே. அவ்வாறு அகலுங்கால் மறுத்துக் கூறாமல் உடன்படுவதே சிறந்த பண்பாகும் என தோழியைத் தலைவி மகிழ்ந்து பாராட்டுகிறாள்.

**இலக்கியமும் தொல்காப்பியமும் - ஒப்பீடு**
**பாடப்பட்டுள்ள தொல்காப்பியப் பகுதிகள்**

வினைவயிற்பிரியுமுன் தலைவி கூற்று நிகழ்த்தும் 12 பாடல்கள் தொல்காப்பியத்தோடு பொருந்தும் சூழல்கள் பின்வருமாறு:

**............... இடும்மையும் ஆகிய இடத்தும் (கற்.145:7)**

துன்பம் ஆகிய இடத்துத் தலைவி கூற்று நிகழ்த்துவாள் என்பது தொல்காப்பியம் சுட்டும் கருத்து.

வினைவயிற்பிரியுமுன் தலைவி கூற்று நிகழ்த்தும் 12 பாடல்கள்

I. தலைவன் இன்றித் தான் தனித்திருக்க வேண்டிய தன் எதிர்கால நிலையைச் சொல்லியது.

II. தலைவன் பொருளை மதிக்கும் பண்பை விமர்சித்துப் பேசி உடம்பட்டது போல எள்ளுதல்.

III. தலைவனின் அன்பைப் புகழ்தல்.

IV. தோழி தலைவனது பொருள்வயிற்பிரிவுக்கு உடம்பட்டமையை நன்று எனல். என நான்கு பொருண்மைகளில் அமைகின்றன.

தலைவன் இன்றித் தான் தனித்திருக்க வேண்டிய தன் எதிர்காலநிலை குறித்து 7 பாடல்கள் அமைந்துள்ளன. தலைவன் பொருளை நினைத்து பிரிவான் எனில் மாலைப்பொழுதில் தனித்து உயிர்வாழ முடியாது என வருந்துகின்றாள். தன்னை வருத்தும்படி பிரிகின்ற குணக்குறைபாடு இல்லாதவர் என தலைவனின் அன்பினைப் புகழ்கின்றாள். இவை அனைத்தும் தலைவனைப் பிரியவிடாது தடுப்பதற்கு தலைவி கையாளும் உத்திமுறையாகக் கொள்ளலாம்.

பிரிவு என்பது தலைவன் தலைவி இருவருக்கும் இடையே அன்பை மிகுதிப்படுத்தும். தன்னிடம் அன்பு கொண்டுள்ள தலைவன் பிரியப் போகின்றான் என்பது தலைவிக்குத் துன்பத்தை தருவதாகும். தலைவனின்றித் தனித்திருக்க முடியாத தன்நிலை தலைவியின் வருத்தத்தைக் காட்டுகின்றது. பிரிவை உணர்ந்த தலைவியின் மனவருத்தத்தைப் புலவர்கள் பாடல்களாகப் படைத்துள்ளனர்.

## பாடப்படாத தொல்காப்பியப் பகுதிகள்

தொல்காப்பியம் சுட்டி இலக்கியம் சுட்டாத சூழல்கள் பின்வருமாறு:

**புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**
**இடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி**
**அன்புறு தக்க கிளத்தல் தானே**
**கிழவோன் செய்வினைக்கு அச்ச மாகும் (கற்.146)**
**தோழியுள் உறுத்த வாயில் புகுப்பினும்**
**ஆவயின் நிகழும் என்மனார் புலவர் (கற்.147)**

உடன்போக்குச் சென்று மணந்துகொண்ட தலைவி கற்புவாழ்வின்போது இடைச்சுரத்துக் கருப்பொருள்களின் செயல்களைச் சுட்டிப் பேசினால் அது தலைவன் மேற்கொள்ளவிருக்கின்ற வினைக்குத் தடையாகும். மேலும் தோழி உள்ளிட்ட வாயில்களைத் தலைவி தலைவன்பால் போகவிட்ட காலத்தும் தலைவன் வினைக்குத் தடை ஏற்படும்.

தலைவி இடைச்சுரத்துக் கருப்பொருள்களின் அன்பைச் சுட்டிப் பேசுவதன் வாயிலாகவோ, தோழியைத் தலைவன்பால் வாயிலாக அனுப்புவதன் வழியாகவோ தலைவன் மேற்கொள்ளவிருக்கும் பொருள் தேடும் செயலைத் தடைசெய்வதாகப் புலவர்கள் சித்திரிக்க விரும்பவில்லை. அவ்வாறு சித்திரிப்பின் அது தலைவி குறித்த மரபுக்கு இழுக்காக அமையலாம்; தலைவனின் ஆக்கச்செயல் தடைபடுவதற்குத் தலைவி தடை ஆகிறாள் என்று அவளது பண்பு நலனுக்கு இழுக்காக அமையலாம் என்று கருதிப் புலவர்கள் இத்தகைய நிலையில் பாடல்கள் பாடவில்லை எனக் கருதலாம்.

**மாறுபட்ட செய்திகள்**

தொல்காப்பியம் சுட்டாமல் இலக்கியம் சுட்டி இருப்பதாகத் தலைவி கூற்றில் அமையும் ஒரு பாடலைக் (நற்.24) குறிப்பிடலாம். இப்பாடல் சற்று மாறுபடுகிறது.

பாலைநிலவழியில் தலைவர் செல்கிறோம் என்று கூறினார். அது நல்ல செயல் என நீ (தோழி) விருப்பத்துடன் கூறினாய். நீ நன்றே செய்தாய் எனத் தலைவி மகிழுவதாக கணக்காயனாரின் நற்றிணை 24 ஆவது பாடல் அமைகிறது.

விளங்கனியே உணவாகவுடையராயிருந்தும் அவை எடுப்பார் மிக்கின்மையால் பயிரில் பரவிக்கிடக்குமென்றது செல்லுந் தேத்து ஆண்டுள்ளாரும் தலைவன் செல்லுமிடத்து எளிதில் பொருள் கிடைக்கும். பொருள் வேட்கையராயினும் ஈட்டுவோர் மிக்கின்மையின் நங்காதலர் அங்கே சென்றவுடனே விரைவில் பொருள் கிட்டுவதாகும் என்பது இறைச்சி வழி பெறப்படுகிறது. தலைவர் பிரிந்தாலும் விரைந்து வருவார்; ஆதலால் என்னால் அதுவரை ஆற்றியிருத்தல் இயலும் எனத் தலைவி பேசுவது சற்று மாறுபட்ட செய்தி ஆகும். பிரிவு குறித்துத் தலைவி வருந்துவதே பொதுச்செய்தியாக அமைய, மகிழ்வதான இத்தகைய செய்தி விதிவிலக்கான செய்தியாக அமைகிறது.

ஆடவர் வினைமேற் கொண்ட உள்ளத்தராய்ப் பொருளீட்டுவதற்கு அகலுவர்; அங்ஙனம் அவர் அகலும்போது மறுத்துக் கூறாமல் உடன்படுவதே அதற்குரிய பண்பாகும். அவன் குறித்த பருவம் வருந்துணை ஆற்றியிருத்தல் கற்புடைமகளிர் கடனாதலின், தலைவி உவந்து கூறினாளாயிற்று. எனவே, குறித்த பருவத்துக் காதலர் வருவராதலின் யான் வருந்தேனெனவும் இதனை யறிந்தே நீ அவரை தாழ்க்காது விடுத்தனையெனவும் குறிப்பாற் கூறினாளாயிற்று என்று இப்பாடலுக்கு உரையாசிரியர் விளக்கம் தருகிறார்.

**முடிவுகள்**

**1. நிகழவிருக்கும் பிரிவு குறித்து நொந்து பேசும் தலைவி**

தலைவன் இன்றித் தான் தனித்திருக்க வேண்டிய தன் எதிர்கால நிலையைச் சுட்டியும், தலைவன் பொருளை மதிக்கும் பண்பை விமர்சித்துப் பேசி பிரிவிற்கு உடம்பட்டது போல எள்ளுதலும், தலைவனின் அன்பைப் புகழ்தலும், தோழி தலைவனது பொருள்வயிற்பிரிவுக்கு உடம்பட்டமையை நன்று என மகிழ்ந்தும் பேசுகின்றாள்.

தலைவனின்றித் தனித்திருக்க முடியாத தலைவியின் வருத்ததைப் பாடல்கள் காட்டுகின்றது. பிரிவை உணர்ந்த தலைவியின் மனவருத்தத்தைப் புலவர்கள் பாடல்களாகப் படைத்துள்ளனர்.

**2. மரபு மீறாத தலைவியையே காட்டவிழைதல்**

தலைவி இடைச்சுரத்துக் கருப்பொருள்களின் அன்பைச் சுட்டிப் பேசுவதன் வாயிலாகவோ, தோழியைத் தலைவன்பால் வாயிலாக அனுப்புவதன் வாயிலாகவோ

தலைவன் மேற்கொள்ளவிருக்கும் பொருள்தேடும் செயலைத் தடை செய்வதாகப் புலவர்கள் சித்தரிக்க விரும்பவில்லை. அவ்வாறு சித்தரிப்பின் அது தலைவி குறித்த மரபுக்கு இழுக்காக அமையலாம், தலைவனின் ஆக்கச்செயல் தடைபடுவதற்குத் தலைவி தடை ஆகிறாள் என்று அவளது பண்பு நலனுக்கு இழுக்காக அமையலாம் என்று கருதிப் புலவர்கள் இத்தகைய நிலையில் பாடல்கள் பாடவில்லை எனக் கருதலாம்.

**3. அறிவு வயப்பட்ட தலைவி**

பாலைவழியில் தலைவர் செல்கிறோம் என்று கூறினார். அது நல்ல செயல் என நீ (தோழி) விருப்பத்துடன் கூறினாய். நீ நன்றே செய்தாய் எனத் தலைவி தலைவனது பொருள்வயிற் பிரிவுக்கு உடம்பட்டு மகிழ்வதாக அமையும் நற்றிணை 24ஆவது மாறுப்பட்ட பாடல் ஆகும்.

தலைவி தலைவனது பிரிவுக்கு வருந்தினாலும், உடன்படுவது கற்புடைய மகளிர் கடமையாகும். புலவர்கள் மரபுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடல் இயற்றியுள்ளனர் எனக் கருதலாம்.

**parutamil@gmail.com**